# ஹெல்த் கெயார் கணெக்ட் (உடல்நலப் பராமரிப்புத் தொடர்பு)

## குடும்ப மருத்துவரை அல்லது விசேட தாதியை (நர்ஸ் பிராக்டிஷனர்) கண்டடைய உதவுதல்

ontario.ca/healthcareconnect

*குடும்ப உடல்நலப் பராமரிப்பளிப்பவரை கண்டுபிடிக்க மக்களுக்கு ஹெல்த் கெயார் கணெக்ட் உதவும்.*

### குடும்ப உடல்நலப் பராமரிப்பளிப்பவரை கண்டடையும் முயற்சிக்கு ஹெல்த் கெயார் கணெக்ட் எவ்வறு ஆதரவளிக்கும்?

வழக்கமான உடல்நலப் பராமரிப்பளிப்பவர் இல்லாதவர்களுக்கு, அவரை தங்களது சமுதாயத்தில் கண்டடைய உதவும் ஒரு திட்டமே ஹெல்த் கெயார் கணெக்டாகும். இத்திட்டம் நோயாளிகளை ஏற்றுக்கொள்ளும் மருத்துவர்களை அல்லது நர்ஸ் பிராக்டிஷனர்களை கண்டுபிடித்து, அவர்களை குடும்ப உடல்நலப் பராமரிப்பளிப்பவர்களை தேடும் மக்களுடன் இணைத்துவிடுகிறது.

### இத்திட்டத்தில் சேர்வது எப்படி

ஹெல்த் கெயார் கணெக்டில் பதிவு செய்வது சுலபமானது. 1-800-445-1822 ஐ அழைக்கும்போது ஒருவர் சுருக்கமான சில கேள்விகளை உங்களிடம் கேட்டபின் உங்களைத் திட்டத்தில் சேர்த்துக்கொள்வார். ontario.ca/healthcareconnect என்ற இணையத்தளத்திலும் நீங்கள் பதிவுசெய்யலாம்

### குடும்ப உடல்நலப் பராமரிப்பளிப்பவர் ஒருவரை சந்திக்க அதிக தேவை உள்ளவர்களுக்கு ஹெல்த் கெயார் கணெக்ட் முற்சலுகை வழங்கும்

உடல்நலத் தேவைகள் அதிகமுள்ள நபர்களுக்கு முற்சலுகை வழங்கப்படுகிறது.

உங்கள் சமுதாயத்தில் குடும்ப மருத்துவர் அல்லது நர்ஸ் பிராக்டிஷனர் கண்டுபிடிக்கப்பட்டதும் நீங்கள் அவரிடம் அனுப்பப்படுவீர்கள்.

*உங்களுக்கு உதவவே ஹெல்த் கெயார் கணெக்ட் உள்ளது. ஆனால் நீங்களும் உடல்நலப் பராமரிப்பளிப்பவரை கண்டுபிடிக்க முயற்சிக்க வேண்டும்.*

### ஹெல்த் கெயார் கணெக்டைப் பற்றி நீங்கள் அறிய வேண்டியது

- குடும்ப மருத்துவர் அல்லது நர்ஸ் பிராக்டிஷனரை கண்டுபிடிக்கும் உங்கள் முயற்சிக்கு ஹெல்த் கெயார் கணெக்ட் கைகொடுக்கும்.
- ஒருவர் கிடைப்பார் என்பதற்கு உத்தரவாதம் இல்லை, எனவே நீங்களும் தொடர்ந்து முயற்சிக்க வேண்டும்
- உங்களிடம் OHIP இலக்கம் இருக்கவேண்டும்.

### குடும்ப உடல்நலப் பராமரிப்பளிப்பவரை கண்டுபிடிக்கும் முயற்சியில் கெயார் கணெக்டர் என்பவர் உங்களுக்கு உதவி செய்வார்

ஹெல்த் கெயார் கணெக்டில் இணைந்த பின், உங்கள் பகுதியில் உடல்நலப் பராமரிப்பளிப்பவரை கண்டடைய உதவும் முகமாக கெயார் கணெக்டர் எனப்படும் ஒரு தாதி உங்களுக்கு நியமிக்கப்படுவார்.

**நீங்களும் உங்கள் கெயார் கணெக்டரும்**

உங்கள் தொடர்புத் தகவலில் அல்லது உடல்நலத்தில் மாற்றம் ஏற்பட்டால் உங்கள் கெயார் கணெக்டரைத் தொடர்புகொள்ள மறக்கவேண்டாம்.

**உங்களுக்கு ஒரு குடும்ப மருத்துவர் அல்லது நர்ஸ் பிராக்டிஷனர் தேவையா? 1-800-445-1822 ஐ அழைக்கவும் அல்லது ontario.ca/healthcareconnect க்குச் செல்லவும்**

Ontario

Tamil – Health Care Connect Cat# 012542 Revised December 2010 © Queen's Printer for Ontario